அளவுக்குத் தண்ணீர் செல்ல முடியாமல், விவசாயம் பாதிக்கப் படுகிறது. எனவே இந்த வேலையை விரைவாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு கருத்தில் கொள்ளும். அதே நேரத்தில் விரைந்து பணியாற்ற அரசு நடவடிக்கையும் எடுக்கும்.

ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம்.

*974. திரு. ஏ. ஜி. சம்பத் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஒன்றியம், கண்டாச்சி புரம் மேல்நிலைப் பள்ளியில் உள்ள அரசு இலவச ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், கண்டாச்சிபுரம் ஆதிதிராவிடர் நலவிடுதி ஊராட்சி ஒன்றியத் திற்குச் சொந்தமான கட்டிடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இந்த விடுதிக்கு கட்டிடம் கட்ட தேவையான இடவசதி உள்ளது. இருந்தபோதிலும் நிதிவசதிக்கேற்ப வரும் நிதியாண்டில் இவ் விடுதிக்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆதிதிராவிடர் நல ஆலோசனைக்குழு.

*1564. திரு. ஆர். அண்ணாநம்பி :

திரு. ஏ. தங்கராஜு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.